நாள் 26.09.2022.
அ வ எண் 20/2021
வா சா 1 ஜெயராஜ், த/பெ ராசையா நாடார்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
1 முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

4, 5 பிரதிவாதிகள் பெயரில் 1 முதல் 3 வரை பிரதிவாதிகளிடம் புகார் அளித்ததற்கான ஆதாரம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நல்லபெத்தான்குளம் என்பது கொடுமுடியாறு அணைக்கட்டு பாசனத்திற்கு உட்பட்ட இடம் என்று எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கொடுமுடியாறு அணைக்கட்டு நீர்தேக்கம் தென்காசியில் உள்ள செயல்பொறியாளர் கட்டுப்பாட்டில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நல்லபெத்தான்குளத்திற்கு 4, 5 பிரதிவாதிகள் சட்டவிரோதமாக தண்ணீர் கொண்டு செல்லக்கூடாது என்று நான் வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் கொடுமுடியாறு அணைகட்டை கட்டுப்பாடடில் வைத்திருக்கும் செயல்பொறியாளர் அவர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரீதான். நம்பியாறு அணைக்கட்டு பொறுத்தவரையில் 2, 3 பிரதிவாதிகள் கால் பராமரிப்பில் பொறுப்பில்தான் உள்ளனர் என்றும் நம்பியாறு கட்டுப்பாடு அவர்களிடம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. 1 முதல் 3 வரை பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். குளங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்வது சம்பந்தமாக உள்ள பிரச்சனைகளுக்கு வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்துதான் அதற்கான தீர்வை நான் பெறவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்ற சொன்னால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் செயல் பற்றி ஒருகாலமும் நான் 1 முதல் 3 வரை பிரதிவாதிகளிடம் புகார் அளித்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 வரை பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.